**உதவி செயற்பொறியாளர் (வே.பொ) (பொ), திருப்பத்தூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
<u>பிறப்பிப்பவர்</u> : திரு.ஜி.இராமச்சந்திரன்

---

<u>செயல்முறை ஆணை எண்.இ/ 968/ 2019</u> நாள்: 07.11.2019

<u>பொருள்:</u> பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4 ல் அடங்கிய பணிகள் 2015-16,2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர்(பிஅ) பதவிக்கு தெரிவு செயப்பட்டவர்கள் - இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

<u>பார்வை:</u> 1.சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பமே), அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி5/139388/2018, நாள்: 05.03.2019.
2.சென்னை-35 தலைமைப்பொறியாளர்(வே.பொ), அவர்களின் செயல்முறை ஆணை எண். அப2/8448/2019, நாள்: 08.03.2019
3.வேலூர்-2,செயற்பொறியாளர்(வே.பொ), அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/916/19(2), நாள்: 15.03.2019
4.வேலூர்-2, செயற்பொறியாளர்(வே.பொ), அவர்களின் கடித எண்.அ1/3151/2019, நாள்: 05.11.2019

**********

<u>ஆணை:-</u>

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015-16,2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டிற்கான தொகுதி-4ல் நேரடி போட்டி தேர்வுகள் மூலம் இளநிலை உதவியாளர்(பிஅ) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பதவியினை பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணிவரன்முறை செய்திட, பார்வை(4)ல் காணும் செயற்பொறியாளர் (வே.பொ) வேலூர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறும், கீழ்காணும் விவரப்படி இவ்வலுவலகத்தில் பணிபுரியும் செல்வி.கு.விக்னேஸ்வரி, அவர்களின் இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | பெயர்/ பதவி / பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | **செல்வி. கு.விக்னேஸ்வரி<br>இளநிலை உதவியாளர் (பிஅ)<br>உதவி செயற்பொறியாளர் அலுவலகம்,<br>வேளாண்மை பொறியியல் துறை,<br>திருப்பத்தூர்.(வே.மா)** | **18.03.2019 முற்பகல்** | **18.03.2019 முற்பகல்** |

செல்வி.கு.விக்னேஸ்வரி, இளநிலை உதவியாளர் (பிஅ) அவர்களுக்கு மூன்றாண்டு தொடர் பணியில், இரண்டாண்டு பணிக்காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை வழங்கப்படுகிறது.

இவருக்கு இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் தகுதி காண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் அதற்கடுத்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7/11/19

உதவி செயற்பொறியாளர் (வே.பொ),(பொ)
திருப்பத்தூர்.வே.மா.

<u>பெறுநர்:</u>
செல்வி. கு.விக்னேஸ்வரி, இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.
<u>நகல்</u> : வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
<u>நகல்</u> : தலைமைப்பொறியாளர்(வே.பொ),சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
<u>நகல்</u> : வேளாண்மை இணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
<u>நகல்</u> : கண்காணிப்பு பொறியாளர்(வே.பொ),வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
<u>நகல்</u> : செயற்பொறியாளர்(வே.பொ),வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
<u>நகல்</u>: இருப்பு கோப்பு